**பொத்துவில் பிரதேச சபை.**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | காணிகள் மற்றும் 29 வாகனங்களின் பெறுமதிகள் கணிக்கப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்படல் வேண்டும். | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகள் கணிப்பீடு செய்வதற்குரிய உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் பெறுமதி கணிப்பீடு செய்வதில் சிரம நிலை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இதை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) | களஞ்சியப் பொருட்களின் பெறுமதியானது ரூபா 197,890 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | பதிவேட்டில் களஞ்சியப் பொருட்களின் கையிருப்பின் பெறுமதி சீர்செய்யப்படல் வேண்டும். | நிதிக்கூற்றின் பிரகாரம் களஞ்சியப் பொருட்களின் பெறுமதியானது தவறுதலாக 2019 இறுதிக் கணக்கறிக்கையில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாது. |

#### (ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டுக்கான ஏனைய வருமானம், வருமான அறவீடு மற்றும் நிலுவைகள் கூற்றின்படி (PS-7) ரூபா 18,571,249 தொகையாக | குறித்த இணக்கமின்மை யினை சீர் செய்யப்படல் | வருமான அறவீடு மற்றும் நிலுவைகள் கூற்றில் நிலையான வைப்பு வட்டி ரூபா 1,977,009.00 தொகை |

| | | |
|---|---|---|
| காணப்பட்டிருந்தும் வருமானச் செலவுக் கணக்கின்படி ரூபா 20,548,258 எனக் காட்டப்பட்டதினால் ரூபா.1,977,009 தொகை வேறுபட்டிருந்தது. | வேண்டும். | உள்ளடக்கப்படவில்லை. 2020 இறுதிக்கணக் கறிக்கையில் இத்தவறு சீர்செய்யப்படும். |
| (ii) நிதிக்கூற்றின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவின் மீதியானது ரூபா 2,120,203 ஆகக் காட்டப்பட்டுள்ள போதிலும், பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,051,075 எனக் காட்டப்பட்டதினால் ரூபா 69,128 தொகை வேறுபட்டிருந்தது. | பதிவேட்டில் முற்பணக் கொடுப்பனவு மீதியானது சீர்செய்யப்படல் வேண்டும். | நிதிக்கூற்றின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவின் மீதியானது 2019 இறுதிக் கணக்கறிக்கையில் தவறுதலாக அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. இது போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாது. |

**(இ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி ரூபா 4,765,574 பெறுமதியான 06 விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் நூலகப்புத்தகப் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த/ மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப் படவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி,நிருவாக விதிகள் | | | |
| (i) பிரிவு 5(12) | பணம் மற்றும் களஞ்சிய பொருட்கள் தொடர்பிலான கருமங்களினை கையாளும் மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்க வில்லை. | குறித்த விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) பிரிவு 59 | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவுக்கு அமைவாக ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் வியாபாரங்கள் பற்றிய நிரலானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 2,501,356 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | fhyq;fle;j itg;Ggf;fs; njhlu;gpy; rig kpf tpiutpy; eltbf;iffis nkw;nfhs;Sk; |

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 14,020,588 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 6,920,147 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

---

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரிகளும் வரிகளும் | 4,505 | - | - | - | 2,005 | - | - | - |
| வாடகை | 9,780 | 9,413 | 8,298 | 4,808 | 8,420 | 9,143 | 7,965 | 3,693 |
| உரிமைக் கட்டணம் | 4,235 | 3,480 | 3,480 | - | 3,380 | 3,234 | 3,234 | - |
| ஏனைய வருமானம் | 24,500 | 31,371 | 37,987 | 4,036 | 28,000 | 27,135 | 24,634 | 10,652 |
| | 43,020 | 44,264 | 49,765 | 8,844 | 41,805 | 39,512 | 35,833 | 14,345 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் 146 விடுதிகள், உணவுச்சாலைகள் பெற்ற வருமானத்தின் 1 வீதத்தை வரியாக அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ்வரியினை அறவிட பின்வருவனவற்றைக் கணிப்பிடுவது மிகவும் சிரமமாக உள்ளது.<br>– விடுதிகளின் ஆண்டு வருமானம்<br>– அவர்களால் சம்பாதிதித இலாபம்<br>– விடுதிகள், காணியின் ஆண்டுப் பெறுமதி<br>இதற்கான போதிய பயிற்சி பெற்ற ஆளணியினர் எமது சபையில் காணப்படவில்லை. சபையின் வருமான பரிசோதகரின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 2.2.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1992 – 2018 வரையான காலப்பகுதிற்குரிய அறவிடப்படவேண்டிய குத்தகை நிலுவை ரூபா 2,778,929 ஆனது அறவிடப்படாது காணப்படுகின்றது. | அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதனை சீர் செய்ய மிக விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 2016 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதிற்குரிய ரூபா 793,486 பொதுச் சந்தையில் உள்ள கடையறை வாடகை நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை அறவீடு சம்பந்தமாக புதிய கடையறைகள் வாடகைக்குவிடப்படும் போது நிலுவையை செலுத்திய பின்பே கடைத் தொகுதிகள் வாடகைக்கு விடப்படும். அத்துடன் சில நிலுவைகள் இவ்வாண்டு அறவீடு செய்யப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் தயாரிக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு உப விதியின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிலைபேறான அபிவிருத்தியினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) 2017, 2018 மற்றும் மீளாய்வாண்டு ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒதுக்கீடு இனங்காணப்பட்டு ஒதுக்கீடு மேற் கொள்ளப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாவனைக்கு உதவாத 10 வாகனங்களினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உதவாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான பொருட்களை விற்றல் மற்றும் அழித்தல் செயற்பாட்டிற்கு குழு அமைக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாளர், முகாமைத்துவ உதவியாளர், வெளிக்கள மேற்பார்வையாளர், 03 சாரதிகள் மற்றும் காவலாளி போன்ற 07 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வெற்றிடம் தொடர்பில் எமது உயர் அதிகாரிகளுக்கு மாதாந்தம் ஆளணி தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டி வருகின்றோம் குறித்த நியமனங்களை செய்யும் அதிகாரம் அவர்களையே சாரும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட முறையே ரூபா 55,765 மற்றும் ரூபா 100,420 தொகைகள் மீளச்செலுத்தப்படாமல் காணப்பட்டன. | மேலதிகமாக அறவிடப்பட்ட தொகையினை மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேலதிகமாக அறவிடப்பட்ட தொகைகளானது ஊழியர்களுக்கு மீளச்செலுத்த மிகவிரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | 18 ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா 559,552 ஆனது 02 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது இருந்தன. | ஊழியர்களின் கடன் நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் நிலுவைகளுக்கான உத்தியோகத்தர்கள் தற்போது அரச சேவையில் இல்லாமையினால் கடன் நிலுவையினை மத்தியஸ்த சபையின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். |
| (ஈ) | ஒரு உத்தியோகத்தருக்கு வழங்குவதற்காக 2009 ஆம் அண்டில் பெறப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை ரூபா 103,747 இன்று வரை அவ் உத்தியோகத்தருக்கு கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஊரிய ஆதாரங்களை ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இக் கொடுப்பனவு பற்றிய ஆதாரங்களை ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரிமம் மாற்றப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 12 வாகனங்கள் உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வாகனங்களை சபையின் பெயருக்கு உரிமமம் மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | UNOPS நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமம் மாற்ற 2019 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது குறித்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வாகனங்களுக்கான பெறுமதி அதிகமாக காணப்பட்டதன் காரணமாக உரிமம் மாற்ற முடியாமல் போய்விட்டது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 46 காணிகள் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | பிரதேச செயலாளரினால் குறித்த உத்தியோகத்தருக்கு பராதீனப்படுத்தும் பணியினை விரைவுபடுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. மேலும் சில சொத்துக்களை நிலஅளவை செய்வதற்கான பணிகள் மாவட்ட நிலஅளவையாளர் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 06 உழவு இயந்திரங்கள், 02 இலுவை நீர்க்கொள்கலன்கள், 02 மோட்டார் சைக்கிள்கள், 02 இலுவைப்பெட்டிகள் மற்றும் ஒரு கெப் வண்டி என்பன 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | வாகனங்களை திருத்தி பயன்படுத்த அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான பொருட்களைவிற்றல் மற்றும் அழித்தல் செயற்பாட்டிற்கு குழு அமைக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

#### 3.4.3 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பை வழங்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டு உலக தரிசன | குறித்த சொத்தினை உரிய தேவைக்கு பயன்படுத்து | இக்காகித மீள்சுழற்சி நிலையத்தினை செயற்படுத்துவதற்கு ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும் அத்துடன் |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் ரூபா 1,231,600 நிதியையும் 2011 ஆம் ஆண்டு சபையின் ரூபா 1,612,127 நிதியையும் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட காகித மீள்சுழற்சி நிலையம் பயன்படுத்தப்படாமல் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றது. | வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இயக்குவதற்கான மின்சாரம் அந்த வீதியில் இல்லை. அங்கு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களும் தற்போது பாவிக்க முடியாத நிலையில் துருப்பிடித்து பழுதடைந்துவிட்டது. எனவே இவற்றை விற்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படும். |

**3.5 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமானது வருடாவருடம் தயாரிக்கப்படல் வேண்டும். | பெறுகைத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள், சுற்றுநிருபங்கள் போன்றவற்றினை ஆராய்ந்து அதனை தழுவியதாக எதிர்வரும் காலங்களில் பெறுகைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |